# Chapter – 9.2

# அக்கறை

## கற்பவை கற்றபின்

**Question 1.**
நிலா, மழை, காற்று, தண்ணீர் போன்றவை குறித்து புதுக்கவிதைகளைத் திரட்டி இலக்கிய மன்றத்தில் படித்துக் காட்டுக.

**Answer:**

எ.கா

**ஹைக்கூ**

| | | |
|---|---|---|
| **இந்தக் காட்டில்**<br>**எந்த மூங்கில்**<br>**புல்லாங்குழல்?**<br>– அமுதோன் | **பிம்பங்களற்ற தனிமையில்**<br>**ஒன்றிலொன்று முகம் பார்த்தன**<br>**சலூன் கண்ணாடிகள்**<br>– நா. முத்துக்குமார் | **வெட்டுக்கிளியின் சப்தத்தில்**<br>**மலையின் மௌனம்**<br>**ஒரு கணம் அசைந்து திரும்புகிறது.**<br>– ஜப்பானியக் கவிஞர் பாஷோ |

| நிலா | மழை |
|---|---|
| கடலில் குளித்து<br>கார்முகிலில் தலை முடித்து<br>வான்வெளியில் நீந்தி வரும்<br>நிலவே..<br>உன்னை நோக்கும் போதெல்லாம்<br>வியப்பே..<br>உடல் பருத்தும் ஒளிகுன்றாய்<br>உடல் இளைத்தும் ஒளிகுன்றாய்<br>முழுமதியாய் ஒய்வின்றி ஒளிர்வாய்<br>ஒளிவீசாது ஒருநாள் ஓய்வும்<br>கொள்கிறாய்.. | மரம் எனும் தேவதை<br>கவரி வீசினாள்<br>கருமேகங்கள் ஒன்றானது<br>ஒன்றான மகிழ்ச்சியில்<br>இடித்தும் மின்னியும்<br>இசை, நடனம்<br>நாட்டியம் பயின்றதாலே<br>ஆனந்தக் கண்ணீர் சிந்தியது<br>மழை என.. |

| காற்று | தண்ணீர் |
|---|---|
| எனக்கு சுவாசம்<br>தரும் காற்றே நீ இன்றி<br>நிலவுலகில் ஏதுமில்லை..<br>தெற்கிலிருந்து நீ வந்தால்<br>தென்றல் ஆகிறாய்<br>வடக்கிலிருந்து நீ வந்தால்<br>வாடை ஆகிறாய்<br>கிழக்கிலிருந்து நீ வந்தால்<br>கொண்டல் ஆகிறாய்<br>மேற்கிலிருந்து நீ வந்தால்<br>மே(ல்) காற்று ஆகிறாய்<br>எங்ஙனம் நீ வந்தாலும்<br>எப் பெயரில் வந்தாலும்<br>எங்களின் ஜீவன் நீயேயாவாய்! | நீரே! உலகில்<br>முக்கால் பாகம்<br>உன்னால்<br>நிறைந்திருந்தாலும்<br>ஏன் பற்றாக்குறை..<br>வாய்க்கால் குளம் குட்டை<br>நதி கடல் எனப் பல<br>முகங்கள் உனக்கு. ஆனாலும்<br>மொண்டு எடுப்பதற்கு<br>இயலா நிலையில்<br>பல ஊர்கள்<br>பல மக்கள்<br>உனக்காகக்,,<br>காத்திருப்ப தேனோ! |

## பாடநூல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**Question 1.**
வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல்
அ) ஒரு சிறு இசை
ஆ) முன்பின்
இ) அந்நியமற்ற நதி
ஈ) உயரப் பறத்தல்

**Answer:**
அ) ஒரு சிறு இசை

### சிறுவினா

**Question 1.**
“பழங்களை விடவும் நசுங்கிப் போனது” – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**Answer:**
இடம்:
இக்கூற்று (இவ் அடி) கல்யாண்ஜி எழுதியுள்ள "அக்கறை" என்னும் கவிதையில் இடம் பெற்றுள்ளது.

**விளக்கம்:**
மிதிவண்டி ஓட்டி வந்த தக்காளி வியாபாரி மிதிவண்டியில் இருந்து சாய்ந்து விழ. கூடையில் இருந்த தக்காளிப் பழங்கள் சிதறி விழுந்தன. தலைக்கு மேல் வேலை இருப்பதாய், அனைவரும் கடந்தும், நடந்தும் சென்றனர். எல்லாம் நசுங்கி வீணானது. பழங்களை விடவும் சக மனிதர்கள் மீது உள்ள நேயமும், அக்கறையும் நசுங்கிப் போனது.

**Question 2.**
மணல் விளையாட்டு என்னும் தலைப்பில் சிறு கவிதை படைக்க.

**Answer:**

**மணல் விளையாட்டு**

மணலில் தான் எத்தனை
விளையாட்டு விளையாடுவோம்..!.
மணல் வீடு கட்டி
மகிழ்வுடன் உறவுகளை வளர்த்து
விளையாடினோம்..!.
ஈர மணலில் கோபுரம் கட்டினோம்
கருப்பட்டி செய்து கவிழ்த்து
வைத்துப் பேசினோம்..!.
மணலுக்குள் குச்சியை
ஒளித்து வைத்து
கிச்சிகிச்சு தாம்பலம்
விளையாடி மணலில்
தொலைந்ததை பொறுமையாய்க்
கண்டெடுத்தோம்..!.
மணலில் ஓடினோம்
ஆடினோம் பாடினோம்
இன்றோ..!.
மடியிலே மடிக்கணினியோடு
பல விளையாட்டை ஆடுகிறார்
மண்ணில் கால் வைக்க
விடுவதில்லை...பெற்றோர்....!.

## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக

**Question 1.**
பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகியோர் எந்த நாட்டு தத்துவஞானிகள்?
அ) எகிப்து
ஆ) கிரேக்கம்
இ) இத்தாலி
ஈ) இஸ்ரேல்

**Answer:**
ஆ) கிரேக்கம்

**Question 2.**
கவிஞர் கல்யாண்ஜியின் இயற்பெயர் யாது?
அ) கல்யாணராமன்
ஆ) கல்யாணசுந்தரம்
இ) கலியுகராமன்
ஈ) கலியபெருமாள்

**Answer:**
ஆ) கல்யாணசுந்தரம்

**Question 3.**
கல்யாண்ஜியின் புனைபெயர் யாது?
அ) வாணிதாசன்
ஆ) வண்ண தாசன்
இ) தமிழ்தாசன்
ஈ) பிச்சை

**Answer:**
ஆ) வண்ண தாசன்

**Question 4.**
கல்யாண்ஜி சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற ஆண்டு எது?
அ) 2014
ஆ) 2015
இ) 2016
ஈ) 2017

**Answer:**
இ) 2016

**Question 5.**
சாகித்ய அகாதெமி விருது பெற்ற கல்யாண்ஜியின் நூல் எது?
அ) புலரி
ஆ) ஆதி
இ) உயரப்பறத்தல்
ஈ) ஒரு சிறு இசை

**Answer:**
ஈ) ஒரு சிறு இசை

**Question 6.**
பொருத்திக்காட்டுக:
அ) ஒளியிலே – கடிதத்தொகுப்பு
ஆ) சில சிறகுகள் சில பறவைகள் – கட்டுரைத் தொகுப்ப
இ) அந்நியமற்ற நதி – சிறுகதைத் தொகுப்பு
ஈ) அகமும் புறமும் – கவிதைத் தொகுப்பு
அ) 3, 1, 4, 2
ஆ) 1, 2, 4, 3
இ) 3, 4, 1, 2
ஈ) 4, 3, 2, 1

**Answer:**
அ) 3, 1, 4, 2

## குறுவினா

**Question 1.**
வண்ணதாசன் என்னும் புனை பெயரில் எழுதுபவர் யார்? அப்பெயரில் எவ்விலக்கியத்தில் பங்களித்து வருகிறார்?

**Answer:**

- கல்யாண்ஜி
- கதை இலக்கியத்தில் 'வண்ணதாசன்' என்னும் பெயரில் தன் பங்களிப்பைச் செய்து வருகிறார்.

## சிறுவினா

**Question 1.**
கல்யாண்ஜியின் கவிதை நூல்களை எழுதுக.

**Answer:**

- புலரி
- முன்பின்
- ஆதி ஆகியவையாகும்.
- மணல் உள்ள ஆறு
- அந்நியமற்ற நதி

**Question 2.**
கல்யாண்ஜியின் சிறுகதை நூல்களை எழுதுக.

**Answer:**

- கலைக்க முடியாத ஒப்பனைகள்.
- தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள்.
- உயரப் பறத்தல்.
- ஒளியிலே தெரிவது போன்றவையாகும்.